1979 பிப்ரவரி 20]

திரு. க. மருதாசலம் : மறைந்த தேசியத் தலைவர்களுக்கு அரசு சார்பில் விழா எடுக்கப்படுகிறது. பசும்பொன் முத்து ராமலிங்கத் தேவர் அவர்களின் பிறந்த நாள் விழா எடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : ஏற்கெனவே பிறந்த நாள் விழா எடுக்கப்பட்டு வருகிறது. அதிலே பேசுகின்ற பேறு பெற்றவன் நான்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : பெரியார் நூற்றாண்டு விழா தபால் தலையை சமீபத்தில் வெளியிட்டார்கள். இப்போது எந்த போஸ்ட் ஆபீசில் அந்தத் தபால் தலை கேட்டாலும் கிடைப்ப தில்லை. ஆனால் பல்வேறு வட மாநிலங்களின் தலைவர்கள் தபால் தலை கிடைத்துக் கொண்டே இருக்கிறது. மத்திய அரசுக்கு எழுதி பெரியார் நூற்றாண்டு விழா தபால் தலையைக் கொஞ்சம் அதிகமாக வெளியிட மத்திய அரசுக்கு எழுதப்படுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தந்தை பெரியார் அவர்களுடைய படம் வெளியிடப்பட்ட தபால் தலை தபால் அலுவலகங்களில் கிடைக்கவில்லை என்றால் அது தந்தை பெரியார் அவர்களுடைய செல்வாக்கைக் காட்டுகிறதே தவிர வேறு அல்ல. அதிகமாக அந்த ஸ்டாம்புகளை வெளியிட வேண்டுமென்று நிச்சயமாக நாம் கேட்போம்.

லாஸ்கோ ஸ்டீல் பாக்டரி, அரூர்

* வினா எண். 120 இ— திரு. எம். அண்ணாமலை : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) அரூர் வட்டம் ஆர். தொட்டம்பட்டி லாஸ்கோ ஸ்டீல் பாக்டரியில் மின்சார டிரான்ஸ்பார்மர் பழுதடைந்ததின் காரணம் அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அதன் மேல் எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் ; (அ)&(ஆ) : இந் நிறுவனத்தின் தொழிற்சாலையில் நிறுவப்பட்டுள்ள 1200 கிலோ வாட் சக்தியுள்ள மின்சார டிரான்ஸ்பார்மர் 29—5—78 அன்று ஷார்ட் சர்க்யூட் ஆனதால் நடுவில் உள்ள பிரதான காயில் தீய்ந்துபோய் பழுதடைந்தது. அந்த டிரான்ஸ்பார்மர் திருவொற்றியூரிலுள்ள அதன் தயாரிப்பாளர்களான திருவாளர்கள் ஹாக்பிரிட்ஜ் ஹெவட்டிக் அண்ட் ஈசன் நிறுவனத்தினால் பழுது பார்க்கப்பட்டு, 4—9—78 முதல் மீண்டும் இயங்கி வருகிறது.

[1979 பிப்ரவரி 20

திரு. எம். அண்ணாமலை: தலைவர் அவர்களே, அரூர் தொட்டம்பட்டி லாஸ்கோ ஸ்டீல் பாக்டரியில் இந்த மின்சார டிரான்ஸ்பார்மர் பழுது பார்க்கப்பட்டு இப்போது செயல்பட்டு வருகிறது என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அப்படி பழுதுபட்ட இடைக்காலங்களில் இரண்டு மாதங்கள் வேலையற்று இருந்த நாட்களில் அந்தத் தொழிலாளர்களுக்கு அட்வான்ஸ் கொடுக்கப்பட்டது. அந்த அட்வான்ஸை அரசு உதவித் தொகையாக அளிக்க பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்வதோடு, அந்தத் தொழிற்சாலையில் உற்பத்தியாகக் கூடிய பொருட்களினுடைய தரங்களை உயர்த்துவதற்கும், சீர்படுத்த நடவடிக்கைகள் எடுப்பதற்கும் அந்தத் தொழிலாளர்களுடைய ஆலோசனை அறியப்படுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, இது ஒரு விடுவிப்பு நிறுவனம், அதாவது ரிலீப் அண்டர்டேக்கிங், ஆகவே தொழில் தகராறுகள் சட்டத்தின்கீழ் தொழிலாளர்களுக்கு வேலையிலிருந்து நிறுத்தி வைக்கப்பட்ட காலத்திற்கு, அதாவது லே ஆப் பீரியடிற்கு, நிவாரணம் அளிக்க வேண்டியதில்லை. எனினும் தொழிலாளர்களுடைய நிலைமையைக் கருத்தில் கொண்டு அவர்களுடைய கஷ்டங்களை ஓரளவிற்கு நிவாரணம் அளிக்க வேண்டுமென்ற முறையிலே தான் வேலையிலிருந்து நிறுத்தப்பட்ட தொழிலாளர்களுக்கு ஒவ்வொரு தொழிலாளருக்கும் 100 முதல் 300 ரூபாய் வரை அட்வான்ஸ் வழங்கப்பட்டிருக்கிறது. அந்தத் தொகை 1979 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் மாதம் 50 ரூபாய் வீதம் அவர்களுடைய சம்பளத்திலிருந்து பிடித்தம் செய்து கொள்ளப்படும். இப்போது தான் இந்தத் தொழில் நிறுவனம் சரியாக இயங்க ஆரம்பித்து இருக்கிறது. ஆகவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதை மானியமாகவோ இனாமாகவோ வழங்க வேண்டுமென்று சொன்ன கருத்து, அதனுடைய நிதிநிலையைப் பொறுத்து எடுக்கவேண்டிய முடிவு, ஆகவே அது சாத்தியமில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அந்த நிறுவனத்தை நல்ல முறையிலே நடத்துவதற்கு அந்தத் தொழிலாளர்களுடைய ஆலோசனை பெறப்படுமா என்று கேட்டார்கள். அது அந்த நிர்வாகத்தை நடத்துகின்ற இயக்குநரையும் நிர்வாக ஆலோசனைக் குழுவையும் பொறுத்தது.

திரு. எம். அண்ணாமலை: தலைவர் அவர்களே, நிதிநிலையைப் பொறுத்து அந்தத் தொழிலாளர்களுக்குக் கொடுத்த அட்வான்ஸை இலவசமாக்குவதற்கு சாத்தியமில்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இருந்தாலும் அவர்களுடைய சம்பளத்தில் பிடித்தாலும்கூட அந்தத் தொழிலாளர்களுக்குக் குடும்ப ஜீவனத்திற்கு கட்டுபடியாகக்கூடிய நிலைமை இல்லை. ஆகவே, முதலமைச்சர் நிதியிலிருந்து—அந்தத்

1979 பிப்ரவரி 20]

தொழிற்சாலையும் பிற்பட்ட பகுதியை சார்ந்துள்ள நிலைமையைக் கருத்தில் எடுத்துக்கொண்டு—நிவாரணமாகக் கொடுத்து அந்தத் தொகையை ஈடுகட்ட அரசாங்கம் முயற்சிக்குமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, ஒரு நிறுவனத்திலே பணியாற்றுகின்ற தொழிலாளர்கள்—அந்த நிறுவனம் சரியாக இயங்குகிற சூழ்நிலை வருகிறபோது அதனால் ஏற்படுகிற லாபத்தைப் பெறுவதற்குத் தகுதியுடைவர்கள்-அதைப் போலவே ஒரு நிறுவனத்திலே நஷ்டம் ஏற்படுகிறபோது அந்த நஷ்டத்தையும் அவர்கள் பகிர்ந்து கொள்ளக்கூடிய நிலைமை இருக்கிறது.

கட்டிடக் கழகம்

* வினா எண். 101—திரு. எஸ். கணேசன் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நமது மாநிலத்தில் கட்டிட கார்ப்பரேஷன் ஒன்றை அமைக்க அரசு உத்தேசித்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன், விவரம் என்ன ?

திரு. எம். வின்சென்ட் : (அமைச்சரின் பேரவை செயலர்) :

(அ) & (ஆ) இவ்விஷயம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, இதைப்பற்றி நிர்வாக சீர்த்திருத்தக் குழு எதுவும் பரிந்துரைகள் செய்துள்ளதா ? அதைப் போலவே இதற்கு முன்னாலே இருந்த தி. மு, க. அரசு இதைப் பற்றி ஏதேனும் முடிவு எடுத்துள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவை செயலர் : தலைவர் அவர்களே, தனக்கென தனியாக (பொதுப்பணித் துறையிலிருந்து வேறுபட்ட) கட்டுமான பிரிவுகளை கொண்ட அரசுத் துறைகள்/நிறுவனங்கள் ஆகியவைகள் தாங்களே அவைகளுக்குரிய கட்டுமானப் பிரிவுகளை வைத்துக்கொள்ளலாம். எனினும் அவைகள் பரவலாகப் பெருகாமல் தடுக்கவேண்டும் என்று நிர்வாகச் சீர்திருத்தக் குழுவின் பரிந்துரை செய்துள்ளது. எல்லா அரசுத்துறை/நிறுவனங்கள் ஆகியவைகளின் கட்டுமானப் பணிகளை பொதுப்பணித் துறையே மேற்கொள்ள வேண்டும் என்று 1975 இல் முன்னால் இருந்த அமைச்சரவை முடிவு செய்துள்ளது.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, நம்முடைய மாநிலத்திலே உள்ள மருத்துவ மனைக் கட்டடங்களைக் மருத்துவத் துறையே மேற்கொள்ள அரசு ஆவன செய்யுமா ?